جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبـر

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்


தொகுப்பு
அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

1

اَلَّذِيْنَ اٰتَيْنٰهُمُ الْكِتٰبَ يَتْلُوْنَهٗ
حَقَّ تِلَاوَتِهٖ اُولٰٓٮِٕكَ يُؤْمِنُوْنَ بِهٖ
وَمَنْ يَّكْفُرْ بِهٖ فَاُولٰٓٮِٕكَ هُمُ الْخٰسِرُوْنَ

யாருக்கு நாம் வேதத்தைக் கொடுத்தோமோ அவர்கள் அதை எவ்வாறு ஓதி(ஒழுகி)ட வேண்டுமோ, அவ்வாறு ஓதுகிறார்கள். அவர்கள் தாம் அதன் மேல் நம்பிக்கை உள்ளவர்கள். யார் அதை நிராகரிக்கின்றார்களோ அவர்கள் பெரும் நஷ்டவாளிகளே!

அல்குர்ஆன் 2:121

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

2

إِنَّ الَّذِينَ يَتْلُونَ كِتَٰبَ اللَّهِ وَأَقَامُوا الصَّلَوٰةَ وَأَنفَقُوا مِمَّا
رَزَقْنَٰهُمْ سِرًّا وَعَلَانِيَةً يَرْجُونَ تِجَٰرَةً لَّن تَبُورَ
لِيُوَفِّيَهُمْ أُجُورَهُمْ وَيَزِيدَهُم مِّن فَضْلِهِۦٓ ۚ إِنَّهُۥ غَفُورٌ شَكُورٌ

நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வின் வேதத்தை ஓதுகிறார்களோ தொழுகையை முறையாகக் கடைப்பிடித்து ஒழுகுகிறார்களோ நாம் அவர்களுக்கு அளித்து இருப்பதிலிருந்து இரகசியமாகவும், வெளிப்படையாகவும் (அல்லாஹ்வின் பாதையில்) செலவு செய்கிறார்களோ, (ஆகிய இவர்கள்) என்றும் அழியாத ஒரு வியாபாரத்தையே ஆதரவு வைக்கிறார்கள்.

அவர்களுக்குரிய நற்கூலியை அவர்களுக்கு அவன் முழுமையாகக் கொடுப்பான். இன்னும் தன் அருளிலிருந்து அவர்களுக்கு மிகுதப்படுத்துவான். நிச்சயமாக அவன் மிக மன்னிப்பவன், நன்றியை ஏற்றுக் கொள்பவன்.

அல்குர்ஆன் 35:29-30

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

3

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ், தன் தூதர் ஒருவர் குரலெடுத்து இனிமையாகக் குர்ஆன் ஓதும்போது செவி கொடுத்துக் கேட்டதைப் போன்று வேறெதையும் அவன் செவிகொடுத்துக் கேட்டதில்லை.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1452

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

4

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

குர்ஆனை(ப் பார்த்தும், மனனமிட்டும்) ஓதுகின்ற இறைநம்பிக்கையாளரின் நிலையானது நாரத்தைப் பழத்தின் நிலையைப் போன்றதாகும். அதன் வாசனையும் நன்று. சுவையும் நன்று.

(மற்ற நற்செயல்கள் புரிந்து கொண்டு) குர்ஆன் ஓதாமலிருக்கும் இறை நம்பிக்கையாளரின் நிலையானது, பேரீச்சம் பழத்தின் நிலையைப் போன்றதாகும். அதற்கு வாசனை கிடையாது. (ஆனால்) அதன் சுவை நன்று.

நயவஞ்சகனாகவும் இருந்துகொண்டு குர்ஆனையும் ஓதிவருகின்றவரின் நிலையானது, துளசிச் செடியின் நிலையை ஒத்திருக்கின்றது. அதன் வாசனை நன்று, சுவையோ கசப்பு.

நயவஞ்சகனாகவும் இருந்துகொண்டு குர்ஆனையும் ஓதாமலிருப்பவரின் நிலையானது, குமட்டிக் காயின் நிலையை ஒத்திருக்கிறது. அதற்கு வாசனையும் கிடையாது, சுவையோ கசப்பு.

அறிவிப்பாளர்: அபூமூசா அல்அஷ்அரீ (ரலி) அவர்கள், முஸ்லிம் 1461

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

5

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

குர்ஆனை நன்கு மனனமிட்டுத் தங்குதடையின்றி ஓதுகின்றவர் கடமை தவறாத கண்ணியமிக்கத் தூதர்(களான வானவர்)களுடன் இருப்பார்.

குர்ஆனை (மனனம் செய்திராவிட்டாலும் அதைச்) சிரமத்துடன் திக்கித் திணறி ஓதிவருகின்றவருக்கு இரு மடங்கு நன்மைகள் உண்டு.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள். முஸ்லிம் 1462

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

6

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் என்னிடம், (நான் இனிய குரலில் குர்ஆன் ஓதுவதைப் பாராட்டி), 'நீங்கள் நேற்று இரவில் குர்ஆன் ஓதிக் கொண்டிருந்ததைச் செவியுற்றேன். அப்போது நீங்கள் என்னைப் பார்த்திருந்தால் (உங்களுக்கு மகிழ்ச்சியாய் இருந்திருக்கும்).

(இறைத்தூதர்) தாவூத் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சங்கீதம் (போன்ற இனிய குரல்) ஒன்று உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது' என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூமூஸா (ரலி) அவர்கள், முஸ்லிம் 145

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

7

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

என் அஷ்அரீ (குல) நண்பர்கள் இரவில் (தம் தங்குமிடங்களில்) நுழையும் போது அவர்கள் குர்ஆன் ஓதும் ஓசையை நான் அறிவேன்.

பகல் நேரத்தில் அவர்கள் தங்கியிருக்கும் இடங்களை நான் பார்த்திருக்காவிட்டாலும், இரவில் அவர்கள் குர்ஆன் ஓதும் ஓசையைக் கேட்டு அவர்கள் தங்கியிருக்கும் இடங்களை நான் அடையாளம் கண்டு கொள்கிறேன்.

அறிவிப்பாளர்: அபூமூசா (ரலி) அவர்கள், புகாரி 4232

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

8

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் மக்களிலேயே அதிகமாக வாரி வழங்குபவர்களாகத் திகழ்ந்தார்கள்.

(வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் ரமளான் மாதத்தில் தம்மைச் சந்திக்கின்ற வேளையில், நபி (ﷺ) அவர்கள் இன்னும் அதிகமாக வாரி வழங்குபவர்களாக இருந்தார்கள்.

ஜிப்ரீல் (அலை) அவர்கள் ரமளானின் ஒவ்வோர் இரவிலும் நபி (ﷺ) அவர்களைச் சந்தித்துக்கொண்டிருந்தார்கள்.

அப்போது (அதுவரை அருளப்பெற்ற) குர்ஆனை ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ﷺ) அவர்களுக்கு நினைவுபடுத்துவார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் தொடர்ந்து வீசும் மழைக் காற்றைவிட அதிகமாக நல்லதை வாரி வழங்குபவர்களாக இருந்தார்கள்.

**அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 6**

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

9

ஒரு மனிதர் 'அல்கஹ்ஃப்' எனும் (18ஆவது) அத்தியாயத்தை (தமது இல்லத்தில் அமர்ந்து) ஓதிக்கொண்டிருந்தார்.

அவருக்கு அருகில் நீண்ட இரு கயிறுகளால் குதிரையொன்று கட்டப்பட்டிருந்தது. அதை ஒரு மேகம் சூழ்ந்துகொண்டு வட்டமிட்டபடி நெருங்கத் தொடங்கியது. அதனால் குதிரை மிரள ஆரம்பித்தது.

விடிந்தவுடன் அவர் நபி (ﷺ)அவர்களிடம் வந்து நடந்ததைத் தெரிவித்தார். அப்போது நபி (ﷺ) அவர்கள் 'குர்ஆன் ஓதியக் காரணத்தால் இறங்கிய அமைதிதான் அது' என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் : பராஉ (ரலி) அவர்கள், முஸ்லிம் 1458

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

10

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள்,
'உங்களில் ஒருவர் தம் வீட்டாரிடம் செல்கையில் வீட்டில் மூன்று பெரிய கொழுத்த சினை ஒட்டகங்கள் காணப்படுவதை விரும்புகிறாரா?' என்று கேட்டார்கள். நாங்கள் 'ஆம்' என்று பதிலளித்தோம்.

அப்போது அவர்கள், 'உங்களில் ஒருவர் தமது தொழுகையில் மூன்று வசனங்களை ஓதுவது மூன்று பெரிய கொழுத்த சினை ஒட்டகங்களைவிடச் சிறந்ததாகும்' என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1468

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

11

நாங்கள் (மஸ்ஜிதுந் நபவீ பள்ளிவாசலின்) திண்ணையில் இருந்தபோது அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் புறப்பட்டு வந்தார்கள்.

அப்போது 'உங்களில் எவர் ஒவ்வொரு நாள் காலையிலும் 'புத்ஹான்' அல்லது 'அகீக்' (சந்தைக்குச்) சென்று பாவம் புரியாமலும் உறவைத் துண்டிக்காமலும் பருத்த திமில்கள் கொண்ட இரு ஒட்டகங்களுடன் திரும்பி வருவதை விரும்புவார்?' என்று கேட்டார்கள். 'நாங்கள் (அனைவருமே) அதை விரும்புவோம்' என்று நாங்கள் பதிலளித்தோம்.

அதற்கு அவர்கள், 'உங்களில் ஒருவர் காலையில் பள்ளிவாசலுக்குப் புறப்பட்டுச் சென்று அல்லாஹ்வின் வேதத்திலிருந்து இரு வசனங்களைக் 'கற்றுக்கொள்வது' அல்லது 'ஓதுவது' இரு ஒட்டகங்களைவிடச் சிறந்ததாகும். மூன்று வசனங்கள் மூன்று ஒட்டகங்களைவிடவும், நான்கு வசனங்கள் நான்கு ஒட்டகங்களைவிடவும் சிறந்ததாகும். இவ்வாறு எத்தனை வசனங்கள் ஓதுகின்றாரோ அந்த அளவு ஒட்டகங்களைவிடச் சிறந்ததாக அமையும்' என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1469

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

12

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

உங்கள் இல்லங்களை (தொழுகை, ஓதுதல் நடைபெறாத) சவக்குழிகளாக ஆக்கிவிடாதீர்கள். 'அல்பகரா' எனும் (இரண்டாவது) அத்தியாயம் ஓதப்படும் இல்லத்திலிருந்து ஷைத்தான் வெருண்டு ஓடிவிடுகிறான்.

அறிவிப்பாளர்: உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1469

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

13

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

குர்ஆனை ஓதிவாருங்கள். ஏனெனில், குர்ஆன் ஓதிவருபவர்களுக்கு அது மறுமையில் வந்து (இறைவனிடம்) பரிந்துரை செய்யும்.

இரு ஒளிச்சுடர்களான 'அல்பகரா' மற்றும் 'ஆலு இம்ரான்' ஆகிய இரு அத்தியாயங்களையும் ஓதிவாருங்கள். ஏனெனில், அவை மறுமை நாளில் நிழல்தரும் மேகங்களைப் போன்றோ அல்லது அணி அணியாகப் பறக்கும் பறவைக் கூட்டங்களைப் போன்றோ வந்து தம்மோடு தொடர்புள்ளவர்களுக்காக (இறைவனிடம்) வாதாடும்.

'அல்பகரா' அத்தியாயத்தை ஓதிவாருங்கள். அதைக் கையாள்வது வளம் சேர்க்கும். அதைக் கைவிடுவது இழப்பைத் தரும். இவ்வத்தியாயத்திற்கு முன் சூனியக்காரர்கள் செயலிழந்துபோவார்கள்.

அறிவிப்பாளர்: அபூஉமாமா அல்பாஹிலீ (ரலி) அவர்கள். முஸ்லிம் 1470

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

14

நபி (ﷺ) அவர்கள், 'மறுமை நாளில் குர்ஆனும் அதன்படி செயலாற்றியவர்களும் அழைத்து வரப்படுவர்.

அப்போது 'அல்பகரா'அத்தியாயமும் 'ஆலு இம்ரான்' அத்தியாயமும் முன்னே வரும்' என்று கூறிவிட்டு, இ(வ்விரு அத்தியாயங்களும் முன்னே வருவ)தற்கு அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் (பின்வரும்) மூன்று உவமைகளைக் கூறினார்கள்.அவற்றை நான் இதுவரை மறந்திடவில்லை.

அவ்விரு அத்தியாயங்களும் (நிழல் தரும்) மேகங்களைப் போன்று, அல்லது நடுவே ஒளியுள்ள இரு கரும் நிழல்களைப் போன்று, அல்லது அணி அணியாகப் பறக்கும் இரு பறவைக் கூட்டங்களைப் போன்று (முன்னே வந்து) தம்மைக் கையாண்டவருக்காக (இறைவனிடம்) வாதாடும்.

அறிவிப்பாளர்: நவ்வாஸ் பின் சம்ஆன் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1471

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

15

எவர் குர்ஆனிலிருந்து ஒரு எழுத்தை ஓதினால் நன்மை இருக்கிறது. ஒரு நன்மை அதுபோன்று பத்து மடங்காக்கப்படும்.

'அலீஃப், லாம், மீம்' ஒரு எழுத்து என்று சொல்லமாட்டேன். மாறாக அலீஃப் ஒரு எழுத்து, லாம் ஒரு எழுத்து, மீம் ஒரு எழுத்தும் ஆகும் என்று நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : இப்னு மஸ்வூத்(ரலி) அவர்கள், திர்மிதி 2910

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

16

மறுமை நாளில் குர்ஆனை ஓதி அதனடிப்படையில் நடந்தவரிடம் குர்ஆனிய தோழரே ஓதுவீராக என்று கூறப்படும். மேலும் உலகத்தில் எவ்வாறு நிறுத்தி நிதானமாக ஓதினீரோ அவ்வாறு ஓதுவீராக!

நிச்சயமாக எந்த வசனத்தை கடைசியாக ஓதி முடிப்பாரோ அதுதான் சொர்க்கத்தில் உமது அந்தஸ்தாகும் என்று கூறப்படும் என நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் அம்ர்(ரலி) அவர்கள், அபூதாவூத் 1464, திர்மிதி 2914

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

17

குர்ஆனை ஓதிய தோழர் மறுமையில் வருவார். அப்போது குர்ஆன், இறைவா ! இவருக்கு ஆடையை அணிவி(ப்பாயாக!) என்று சொல்லும். அப்போது அவருக்கு உயர்ந்த கிரீடம் அணிவிக்கப்படும்.

இறைவா! இவருக்கு உன் அருளை வழங்குவாயாக! என்று கூறும். அப்போது அவருக்கு உயர்ந்த சீருடை அணிவிக்கப்படும்.

பிறகு குர்ஆன் இவரை பொருந்திக் கொள்ளுமாறு சொல்லும் அவரை இறைவன் பொருந்திக் கொள்வான்.

அம்மனிதரிடம் குர்ஆனை நிறுத்தி நிதானமாக ஓதுவீராக!, அவர் ஓதுகிறபோது ஒவ்வொரு வசனத்திற்கும் ஒரு நன்மை அதிகப்படுத்தப்படும் என்று நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் அம்ர்(ரலி) அவர்கள், அபூதாவுத் 1464, திர்மிதி 2914

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

18

## அல்பகரா அத்தியாயத்தின் சிறப்பு

அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

உங்கள் இல்லங்களை (தொழுகை, ஓதுதல் நடைபெறாத) சவக்குழிகளாக ஆக்கிவிடாதீர்கள். 'அல்பகரா' எனும் (இரண்டாவது) அத்தியாயம் ஓதப்படும் இல்லத்திலிருந்து ஷைத்தான் வெருண்டு ஓடிவிடுகிறான்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள். முஸ்லிம் 1430

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

19

## அல்ஃபாத்திஹா அத்தியாயத்தின் சிறப்பு

அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

குர்ஆனின் தோற்றுவாய் (எனும் ‘அல்ஃபாத்திஹா’ அத்தியாயத்தை) ஓதாதவருக்குத் தொழுகையே கிடையாது.’

அறிவிப்பாளர்: உபாதா பின் அஸ்ஸாமித் (ரலி) அவர்கள், புகாரி 756

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

20

## இரு ஒளிச்சுடர்கள்

ஒரு முறை) நபி (ﷺ) அவர்களிடம் (வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் அமர்ந்திருந்தபோது தமக்கு மேலிருந்து ஒரு சப்தம் வருவதைக் கேட்டார் அவர். அப்போது வானத்தை அண்ணாந்து பார்த்த ஜிப்ரீல் (அலை) அவர்கள், 'இதோ, வானில் இதுவரை திறக்கப்பட்டிராத ஒரு கதவு இப்போது திறக்கப்பட்டு இருக்கிறது. (அதன் சப்தமே இப்போது கேட்டது.)' என்று கூறினார்கள்.

அந்தக் கதவு வழியாக ஒரு வானவர் இறங்கி (நபியவர்களிடம்) வந்தார். அப்போது ஜிப்ரீல் (அலை) அவர்கள் 'இதோ இந்த வானவர் இப்போதுதான் பூமிக்கு இறங்கி வந்திருக்கிறார். இதற்கு முன் எப்போதும் அவர் பூமிக்கு இறங்கியதேயில்லை' என்று கூறினார்கள்.

அவ்வானவர் சலாம் கூறிவிட்டு, 'உங்களுக்கு முன் எந்த இறைத்தூதருக்கும் வழங்கப் பெற்றிராத இரு ஒளிச்சுடர்கள் உங்களுக்கு வழங்கப்பெற்றுள்ள நற்செய்தியைப் பெறுங்கள். 'அல்ஃபாத்திஹா' அத்தியாயமும் 'அல்பகரா' அத்தியாயத்தின் இறுதி வசனங்களுமே அவை. அவற்றிலுள்ள (பிரார்த்தனை வரிகளில்) எதை நீங்கள் ஓதினாலும் அது உங்களுக்கு வழங்கப் பெறாமல் இருப்பதில்லை'என்று கூறினார்.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1472

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

21

## அல்பகராவின் இறுதி இரண்டு வசனங்களின் சிறப்புகள்

அப்துர் ரஹ்மான் பின் யஸீத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது.

நான் அபூமஸ்ஊத் (உக்பா பின் ஆமிர் – ரலி) அவர்களை இறையில்லம் (கஅபா) அருகில் சந்தித்தேன்.

அவர்களிடம் 'அல்பகரா அத்தியாயத்தின் இரு வசனங்கள் குறித்துத் தாங்கள் அறிவித்த ஹதீஸ் எனக்கு எட்டியது' என்று கூறினேன்.

அதற்கு அபூமஸ்ஊத் (ரலி) அவர்கள், 'ஆம். அல்லாஹ்வின் தூதர் (ﷺ)அவர்கள் 'எவர் அல்பகரா அத்தியாயத்தின் இறுதி இரு வசனங்களை இரவில் ஓதுகிறாரோ அவருக்கு அந்த இரண்டுமே போதும் எனக் கூறினார்கள்' என்றார்கள்.

அறிவிப்பாளர்: அபூமஸ்ஊத் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1473

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

22

## நபி (ﷺ) அவர்கள் ஃபஜ்ருடைய முன் சுன்னத்தில் ஓதிய வசனங்கள்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் ஃபஜ்ருடைய (சுன்னத்) இரண்டு ரக்அத்களில் (முதல் ரக்அத்தில் அல்பகரா அத்தியாயத்திலுள்ள) 'கூலூ ஆமன்னா பில்லாஹி வ மா உன்ஸில இலைனா...' (என்று தொடங்கும் 2:136ஆவது) வசனத்தையும், (இரண்டாவது ரக்அத்தில்) 'ஆலு இம்ரான்' அத்தியாயத்திலுள்ள 'தஆலவ் இலா கலிமதின் சவாயிம் பைனனா வ பைனக்கும்...' (என்று தொடங்கும் 3:64ஆவது) வசனத்தையும் ஓதுவார்கள்.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1318

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

23

## நபி (ﷺ) அவர்கள் ஃபஜ்ருடைய முன் சுன்னத்தில் ஓதிய வசனங்கள்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் ஃபஜ்ருடைய (சுன்னத்) இரண்டு ரக்அத்களில் முதலாவது ரக்அத்தில் 'அல்பகரா' அத்தியாயத்திலுள்ள 'கூலூ ஆமன்னா பில்லாஹி வ மா உன்ஸில இலைனா...' (என்று தொடங்கும் 2:136ஆவது) வசனத்தையும், இரண்டாவது ரக்அத்தில் 'ஆமன்னா பில்லாஹி வஷ்ஹத் பிஅன்னா முஸ்லிமூன்' (என்று முடியும் 3:52ஆவது வசனத்தையும்) ஓதுவார்கள்.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1317

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

24

## நபி(ﷺ) அவர்கள் பெருநாள் தொழுகையில் ஓதிய ஸூராக்கள்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் இரு பெருநாள் தொழுகையிலும் ஜுமுஆவிலும் ’சப்பி ஹிஸ்ம ரப்பிகல் அஃலா’ (87) மற்றும் ‘ஹல் அத்தாக்க ஹதீஸுல் ஃகாஷியா’ (88) ஆகிய அத்தியாயங்களை ஓதுவார்கள்.

அறிவிப்பாளர்: நுஅமான் பின் பஷீர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1592

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

25

## நபி(ﷺ) அவர்கள் பெருநாள் தொழுகையில் ஓதிய ஸூராக்கள்

’அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் பெருநாளி(ன் தொழுகையி)ல் எ(ந்த அத்தியாயத்)தை ஓதுவார்கள்?’ என்று என்னிடம் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு நான் ’இக்தரபத்திஸ் ஸாஅத்து’ எனும் (54ஆவது) அத்தியாயத்தையும் ’காஃப் வல்குர்ஆனில் மஜீத்’ எனும் (50ஆவது) அத்தியாயத்தையும் ஓதுவார்கள்’ என்று விடையளித்தேன்.

அறிவிப்பாளர்: அபூவாக்கித் அவ்ஃப் பின் அல்ஹாரிஸ் அல்லைஸீ (ரலி) அவர்கள், முஸ்லிம் 1618

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

26

## அல் இஃலாஸ் அத்தியாயத்தின் சிறப்பு

நபி (ﷺ) அவர்கள் (மக்களை நோக்கி), 'ஓர் இரவில் குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியை உங்களில் ஒருவரால் ஓத முடியாதா?' என்று கேட்டார்கள்.

'(ஒரே இரவில்) எவ்வாறு குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியை ஓத இயலும்?' என்று மக்கள் கேட்டார்கள்.

நபி (ﷺ) அவர்கள் 'குல் ஹுவல்லாஹு அஹத் (என்று தொடங்கும் 112ஆவது அத்தியாயம்) குர்ஆனின் மூன்றிலொரு பங்கிற்கு ஈடானதாகும்' என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபுதர்தா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1477

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

27

## அல் இஹ்லாஸ் அத்தியாயத்தின் சிறப்பு

(ஒரு முறை) அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் (எங்களிடம், 'மக்களே!) ஒன்று கூடுங்கள், நான் உங்களுக்குக் குர்ஆனின் மூன்றிலொரு பகுதியை ஓதிக் காட்டப் போகிறேன்' என்று கூறினார்கள். அப்போது மக்கள் ஒன்றுகூடினர்.

பிறகு அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் (எங்களிடையே) புறப்பட்டு வந்து 'குல் ஹுவல்லாஹு அஹத்' (எனத் தொடங்கும் 112ஆவது) அத்தியாயத்தை ஓதிக் காட்டினார்கள்.

பிறகு (தமது இல்லத்திற்குள்) சென்றுவிட்டார்கள். அப்போது எங்களில் சிலர் சிலரிடம், 'அவர்களுக்கு வானிலிருந்து ஏதேனும் செய்தி வந்திருக்கிறது போலும். அதன் காரணமாகவே அவர்கள் உள்ளே சென்றுவிட்டார்கள் என்று கருதுகிறேன்' என்றனர்.

பிறகு அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் வெளியே வந்து 'நான் (சற்று முன்) உங்களிடம் குர்ஆனின் மூன்றிலொரு பகுதியை ஓதிக் காட்டுவேன் எனக் குறிப்பிட்டேன். அறிக ! அந்த (112ஆவது) அத்தியாயம் குர்ஆனின் மூன்றிலொரு பகுதிக்கு ஈடானதேயாகும். என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1479

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

28

## அல்முஅவ்விதத்தைன்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

உமக்குத் தெரியாதா? இன்றிரவு (எனக்கு) சில வசனங்கள் அருளப்பெற்றுள்ளன. அவையொத்த வசனங்கள் முன்னெப்போதும் காணப்பட்டதில்லை. அவை, குல் அஊது பிரப்பில் ஃபலக், குல் அஊது பிரப்பின்னாஸ்' (113, 114ஆகிய) அத்தியாயங்களாகும்.

அறிவிப்பாளர்: உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1482

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

29

## இறுதி மூன்று அத்தியாயங்களின் சிறப்புகள்

நபி(ﷺ) அவர்கள் எந்த நோயில் இறந்தார்களோ அந்த நோயின்போது (குர்ஆனில் உள்ள) பாதுகாப்புக் கோரும் (இறுதி மூன்று) அத்தியாயங்களை ஓதித் தம் (உடல்) மீதே ஊதிக்கொள்வார்கள்.

அவர்களுக்கு நோய் கடுமையானபோது நான் அவற்றை ஓதி அவர்களின் மீது ஊதிக் கொண்டும் அவர்களின் கையின் சுபிட்சம் (பரக்கத்) கருதி அதைக்கொண்டே (அவர்களின் மேனியை) தடவிக் கொடுத்துக் கொண்டும் இருந்தேன்.

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், புகாரி 5751

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

30

## நபி(ﷺ) அவர்கள் வெள்ளிக்கிழமை ஃபஜ்ர் தொழுகையில் ஓதியவை

நபி(ﷺ) அவர்கள் வெள்ளிக்கிழமை ஃபஜ்ர் தொழுகையில் 'அலிஃப் லாம் மீம் தன்ஸீல் அஸ்ஸஜ்தா' (எனும் 32ஆவது) அத்தியாயத்தையும் 'ஹல் அத்தா அலல் இன்ஸான்' (எனும் 76ஆவது) அத்தியாயத்தையும் ஓதுவார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், புகாரி 891

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

31

## நபி(ﷺ) அவர்கள் ஜூம்ஆ தினம் ஓதியவை

அம்ரா பின்த் அப்திர் ரஹ்மான் (ரலி) அவர்களின் சகோதரி கூறியதாவது.

நான் வெள்ளிக்கிழமை அன்று ‘காஃப் வல்குர்ஆனில் மஜீத்’ எனும் (50ஆவது) அத்தியாயத்தை அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களின் வாயிலிருந்து செவியுற்றேன்.

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் ஒவ்வொரு ஜுமுஆ (சொற்பொழி)விலும் இந்த அத்தியாயத்தை ஓதுவார்கள்.

முஸ்லிம் 1580

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

32

## நபி(ﷺ) அவர்கள் இஷா தொழுகையில் ஓதியவை

நபி (ﷺ) அவர்கள் இஷா தொழு கையில் 'வத்தீனீ வஸ்ஸைத்தூனி...' எனும் (95ஆவது) அத்தியாயத்தை ஓதுவதை நான் கேட்டேன்.

நபி (ﷺ) அவர்களை விடவும் 'அழகிய குரல் உடையவரை' அல்லது 'அழகாக ஓதுபவரை' நான் கண்டதில்லை.

அறிவிப்பாளர்: பராஉ பின் ஆஸிப் (ரலி) அவர்கள், புகாரி 7546

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

33

## குர்ஆனை இராகத்துடன் ஓதுதல்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: குர்ஆனை (முறைப்படி) இராகத்துடன் (இனிய குரலில்) ஓதாதவர் நம்மைச் சார்ந்தவர் அல்லர்.

அறிவிப்பாளர்: பராஉ பின் ஆஸிப் (ரலி) அவர்கள், புகாரி 7527

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

34

நபி (ﷺ) அவர்கள்,
நான் மாதவிடாயுடன்
இருந்தபோது என் மடியில் தமது
தலையை வைத்தபடி குர்ஆனை
ஓதிக் கொண்டிருந்தார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், புகாரி 7549

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

35

நபி (ﷺ) அவர்கள் அவர்கள் கூறினார்கள்.

இரண்டில் தவிர வேறெதிலும் பொறாமை கூடாது.

1. ஒரு மனிதருக்கு அல்லாஹ் குர்ஆன் ஞானத்தை அருள, அவர் அதை அல்லும்பகலும் ஓதி (அதன்படி செயல்பட்டு) வருகிறார்.

2. இன்னொரு மனிதருக்கு அல்லாஹ் செல்வத்தை வழங்க, அவர் அதை அல்லும் பகலும் தானம் செய்கிறார்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், புகாரி 7529

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

36

நபி (ﷺ) அவர்கள் உபை பின் கஅப் (ரலி) அவர்களிடம் "அல்லாஹ் உங்களுக்கு, "வேதம் அருளப்பட்டவர்களிலும் இணைவைப்பாளர்களிலும் உள்ள இறைமறுப்பாளர்கள் தெளிவான சான்று தங்களிடம் வரும்வரை தங்களுடைய இறைமறுப்பிலிருந்து விலகிக் கொள்வோராய் இருக்கவில்லை..." எனும் (திருக்குர்ஆனின் 98ஆம்) அத்தியாயத்தை ஓதிக்காட்டும்படி எனக்குக் கட்டளை யிட்டான்" என்று சொன்னார்கள்.

அதற்கு உபை பின் கஅப் (ரலி) அவர்கள், "என் பெயரைக் குறிப்பிட்டா (அப்படிச்) சொன்னான்?" என்று கேட்க, நபி(ﷺ) அவர்கள், "ஆம்' என்று பதிலளித்தார்கள். அதைக் கேட்டு உபை பின் கஅப் (ரலி) அவர்கள் (ஆனந்தம் மேலிட) அழுதார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள், புகாரி 3809

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

37

(ஒருமுறை) நபி (ﷺ) அவர்கள் என்னிடம், “எனக்கு (குர்ஆனை) ஓதிக் காட்டுங்கள்” என்று சொன்னார்கள்.

நான், “தங்கள்மீதே குர்ஆன் அருளப்பட்டுக் கொண்டிருக்க, தங்களுக்கே நான் ஓதிக்காட்டுவதா?” என்று கேட்டேன். அதற்கு அவர்கள், “ஏனெனில், நான் பிறரிடமிருந்து அதைக் கேட்க விரும்புகிறேன்” என்று சொன்னார்கள்.

ஆகவே, நான் அவர்களுக்கு “அந்நிஸா‘ அத்தியாயத்தை ஓதிக்காட்டினேன். “ஒவ்வொரு சமுதாயத்தாரிலிருந்தும் (அவர்களுடைய நபியாகிய) சாட்சியை நாம் (மறுமையில்) கொண்டுவரும்போதும், (நபியே!) உம்மை இவர்களுக்கெதிரான சாட்சியாகக் கொண்டுவரும்போதும் (இவர்களின் நிலை) எப்படியிருக்கும்?” எனும் (4:41ஆவது) வசனத்தை நான் அடைந்தபோது நபி (ஸல்) அவர்கள், “நிறுத்துங்கள்” என்று சொன்னார்கள். அப்போது அவர்களின் கண்கள் இரண்டும் கண்ணீரைச் சொரிந்து கொண்டிருந்தன.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள், புஹாரி 4582

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

38

## நபி(ﷺ) அவர்கள் கனவில் சுவனத்தில் குர்ஆன் ஓதிய நபித்தோழர்

தூங்கிக் கொண்டிருந்த நான் கனவில் என்னை சொர்க்கத்தில் இருப்பதாகக் கண்டேன். அங்கு ஒருவர் (குர் ஆன்) ஓதி கொண்டிருக்கும் சப்தத்தை செவியுற்ற நான், இவர் யார்? என்று கேட்டேன். அதற்கவர்கள், ஹாரிஸா இப்னு நுஃமான் என்று பதிலளித்தார்கள்! என்று கூறிய நபி (ﷺ) அவர்கள், 'இது போன்றுதான் நல்லறங்களுக்குக் கூலி கிடைக்கும்! இது போன்றுதான் நல்லறங்களுக்குக் கூலி கிடைக்கும்! தாய்க்குப் பணிவிடை செய்யும் மனிதர்களிலேயே அவர் மிகச் சிறந்த பணிவிடையாளராகத் திகழ்ந்தார் என்றார்கள்".

அறிவிப்பாளர் : ஆயிஷா (ரலி) அவர்கள், அஹ்மத் 24172

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

39

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

இந்தக் குர்ஆனை (ஓதி அதை)க் கவனித்து வாருங்கள். ஏனெனில், முஹம்மதின் உயிர் எவன் கையில் உள்ளதோ அவன்மீது சத்தியமாக! கயிற்றில் கட்டிவைக்கப்பட்டுள்ள ஒட்டகத்தை விட மிக வேகமாகக் குர்ஆன் தப்பிவிடக் கூடியதாகும்.

அறிவிப்பாளர்: அபூமூஸா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1449

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

40

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

இன்ன இன்ன (குர்ஆன்) அத்தியாயங்களை நான் மறந்துவிட்டேன் அல்லது ’இன்ன இன்ன (குர்ஆன்) வசனங்களை நான் மறந்துவிட்டேன்’ என்று ஒருவர் கூறுவதுதான் அவரின் வார்த்தைகளிலேயே மிகவும் மோசமான வார்த்தையாகும். வேண்டுமானால், ’மறக்க வைக்கப்பட்டுவிட்டது’ என்று அவர் கூறட்டும்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அவர்கள், முஸ்லிம் 1448

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

41

## இனிய குரலில் ஓதுதல்

உங்களது (இனிய) குரலால் குர்ஆனுக்கு அழகு சேருங்கள். இனிய குரல் என்பது குர்ஆனுக்கு இன்னும் அழகை அதிகப்படுத்தும் என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: பராஃ இப்னு ஆஸிப் (ரலி) அவர்கள், நஸாஈ 1015

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

42

மக்கள் இறையில்லங்களில் ஒன்றில் ஒன்றுகூடி, அல்லாஹ்வின் வேதத்தை ஓதிக்கொண்டும் அதை ஒருவருக்கொருவர் படித்துக்கொடுத்துக் கொண்டும் இருந்தால், அவர்கள்மீது அமைதி இறங்குகிறது. அவர்களை இறையருள் போர்த்திக் கொள்கிறது. அவர்களை வானவர்கள் சூழ்ந்து கொள்கின்றனர். மேலும் இறைவன், அவர்களைக் குறித்துத் தம்மிடம் இருப்போரிடம் (பெருமையுடன்) நினைவுகூருகிறான்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 5231

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

43

நபி (ﷺ) அவர்கள் (மக்கா வெற்றி நாளன்று) பயணித்துக் கொண்டிருந்த தமது ஒட்டகத்தின் மீது இருந்தவாறு ‘அல்ஃபத்ஹ் எனும் (48ஆவது) அத்தியாயத்தை’ அல்லது ‘அந்த அத்தியாயத்திலிருந்து ஒரு பகுதியை’ மெல்லிய குரலில் ‘தர்ஜீஉ’ எனும் ஓசை நயத்துடன் ஓதிக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் முஃகஃப்பல் (ரலி) அவர்கள், புகாரி 5047

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

44

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

ஒருவர் இரவில் வழமையாக ஓதி வருபவற்றை, அல்லது அதில் ஒரு பகுதியை ஓதாமல் உறங்கிவிட்டால் அதை அவர் ஃபஜ்ர் தொழுகைக்கும் லுஹர் தொழுகைக்கும் இடையே ஓதினால் இரவில் ஓதியதைப் போன்றே அவருக்கு (நன்மை) எழுதப்படுகிறது.

அறிவிப்பாளர்: உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள். முஸ்லிம் 1360

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

45

இரவுத் தொழுகையில் நபி(ﷺ) அவர்கள் அல்குர்ஆனை ஓதும் போது இறைவனைத் துதிப்பது பற்றிக் கூறும் வசனத்தை ஓதிச்செல்லும்போது (ஓதுவதை நிறுத்திவிட்டு), (சுப்ஹானல்லாஹ் – அல்லாஹ் தூயவன் என) இறைவனைத் துதித்தார்கள்.

(இறையருளை) வேண்டுவது பற்றிக்கூறும் வசனத்தைக் கடந்து செல்லும் போது (ஓதுவதை நிறுத்திவிட்டு), (இறையருளை) வேண்டினார்கள்.

(இறை தண்டனையில் இருந்து) பாதுகாப்புக் கோருவது பற்றிக் கூறும் வசனத்தை ஓதிச் செல்லும்போது (ஓதுவதை நிறுத்திவிட்டு, இறைவனிடம்) பாதுகாப்புக் கோரினார்கள்.

(ஹதீஸின் ஒரு பகுதி)

அறிவிப்பாளர்: ஹுதைஃபா பின் அல்யமான் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1421

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

46

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

ஆதமின் மைந்தன் (மனிதன்) ஸஜ்தா (சிரவணக்கத்திற்கான) வசனத்தை ஓதி சிரவணக்கம் (ஸஜ்தா) செய்தால் ஷைத்தான் அழுதவாறே 'அந்தோ எனக்கு வந்த நாசமே! ஆதமின் மைந்தன் சிரவணக்கம் செய்யும்படி கட்டளையிடப்பட்டான். அவன் சிரவணக்கம் செய்துவிட்டான். அவனுக்குச் சொர்க்கம் கிடைக்கப்போகிறது.

ஆனால் (ஆதி மனிதர் ஆதமுக்குச்) சிரம்பணியும்படி எனக்குக் கட்டளையிடப்பட்டது. நானோ மறுத்து விட்டேன். எனவே, எனக்கு நரகம்தான்' என்று கூறியபடி விலகிச்செல்கிறான்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 133

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

47

## அல்குர்ஆனை ஓதி முடிப்பதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய காலம்

என்னிடம் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் 'ஒவ்வொரு மாதமும் (ஒருமுறை) குர்ஆனை ஓதி நிறைவு செய்வீராக!' என்றார்கள். அப்போது நான், '(அதைவிடவும் குறைந்த நாட்களில் குர்ஆனை முழுமையாக ஓதி முடிக்கும்) சக்தி எனக்கு உள்ளது' என்று கூறினேன்.

'அப்படியானால் இருபது இரவுகளில் (ஒருமுறை) ஓதி நிறைவு செய்வீராக!' என்றார்கள். அப்போதும் நான், '(அதைவிடவும் குறைந்த நாட்களில் குர்ஆனை முழுமையாக ஓதி முடிக்கும்) சக்தி எனக்கு உள்ளது' என்றேன்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள், 'அப்படியானால் ஏழு நாட்களில் (ஒருமுறை) ஓதி நிறைவு செய்வீராக! அதைவிட (ஓதுவதை) அதிகமாக்கிவிடாதீர்!' என்று சொன்னார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2139

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

48

## அல்குர்ஆனை ஓதி முடிப்பதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய காலம்

"ஒவ்வொரு மாதமும் (ஒரு தடவை) குர்ஆனை (முழுமையாக) ஓதுவீராக!" என்றார்கள். "இதைவிட அதிகமாக (ஓத) எனக்குச் சக்தி உள்ளது" என்று நான் கூறிக்கொண்டே இருந்தேன்.

(நான் கேட்கக் கேட்க குறைத்துக்கொண்டே வந்து) முடிவில், "மூன்று நாட்களில் ஒரு தடவை குர்ஆனை (முழுமையாக) ஓதுவீராக!" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள், புகாரி 1978

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

49

## குர்ஆனை ஓதிமுடிக்க குறைந்தபட்ச அளவு மூன்று நாட்கள்

மூன்று நாட்களை விட குறைவாக அல்குர்ஆனை ஓதி முடிப்பவருக்கு (அது) விளங்காது என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அவர்கள், அபூதாவுத் 1394

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

50

## தெளிவாக, நிறுத்தி ஓதுதல்

وَرَتِّلِ الْقُرْاٰنَ تَرْتِيْلًا

மேலும் குர்ஆனைத் தெளிவாகவும், நிறுத்தி நிறுத்தியும் ஓதுவீராக.

அல்குர்ஆன் 73: 4

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

51

## ஓதுவதற்கு முன் ஷைத்தானை விட்டும் பாதுகாவல் தேடுதல்

فَإِذَا قَرَأْتَ الْقُرْآنَ فَاسْتَعِذْ بِاللَّهِ
مِنَ الشَّيْطَٰنِ الرَّجِيمِ

மேலும் (நபியே!) நீர் குர்ஆனை ஓதுவீராயின் (முன்னதாக) வெருட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் காவல் தேடிக்கொள்வீராக !

அல்குர்ஆன் 16 : 98

# திருக்குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

52

وَاِذَا قُرِئَ الْقُرْاٰنُ فَاسْتَمِعُوْا لَهٗ
وَاَنْصِتُوْا لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ

குர்ஆன் ஓதப்படும்போது அதனை நீங்கள் செவிதாழ்த்தி (கவனமாகக்) கேளுங்கள். அப்பொழுது நிசப்தமாக இருங்கள் – (இதனால்) நீங்கள் கிருபை செய்யப்படுவீர்கள் !

அல்குர்ஆன் 7:204